செ.வெ.எண்:400/2009(செமதொஅ) நாள். 17.11.2009

**காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் சென்னை மாநில திட்டக்குழு மூலம் மனித வளர்ச்சி மற்றும் பாலின பாகுபாடு விழிப்புணர்வு பயிற்சி மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது**

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் சென்னை மாநில திட்டக்குழு மூலம் மனித வளர்ச்சி மற்றும் பாலின பாகுபாடு விழிப்புணர்வு பயிற்சி மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் மகளிர் திட்ட அலுவலர், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன முதல்வர், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள், நகரமன்றத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி அவர்கள் தலைமையுரையாற்றிப் பேசும்போது, மனித வளர்ச்சி மற்றும் பாலின பாகுபாடு விழிப்புணர்வு பயிற்சி முகாமில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள அனைவரையும் மாவட்ட ஊராட்சியின் சார்பாக அனைவரையும் வரவேற்கின்றேன். இந்த பயிற்சியில் மனித வளர்ச்சி கோட்பாடுகள் , மனித மேம்பாட்டு பரிமாணங்கள், பாலின ஆய்வு குறித்த வீடியோ தொகுப்புகள், மனித மேம்பாட்டில் உள்ள பிரச்சனைகளும், அரசின் திட்டங்களும் போன்ற தலைப்பில் இங்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இவற்றையொல்லாம் நீங்கள் தெரிந்து கொண்டு அதை தங்கள் ஊராட்சியில் உள்ள பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி மனித வளத்தை மேம்பாடுத்தவும், அரசின் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த பயிற்சியில் சென்னை மாநில திட்டக்குழு திருமதி.கிருபா அவர்கள் மனித வளர்ச்சி கோட்பாடுகள் குறித்தும், ஈரோடு மனிதவள மேம்பாட்டு ஆலோசகர் திரு.சி.சந்திரமோகன் அவர்கள் மனித மேம்பாட்டை அளவிடுதல் குறித்தும், காட்டுப்புத்தூர் கிராம ஊராட்சி தலைவர் திரு.விஸ்வநாதன் அவர்கள் நல்லாட்சியின் கூறுகள் மற்றும் அதனைச் சார்ந்த அமைப்புகள் குறித்தும், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன பயிற்சி ஒருங்கிணைப்பாளர் திரு.ச.வி.நகரம் அவர்கள் பாலின ஆய்வுக் குறித்தும், வீடியோ தொகுப்புகள் மற்றும் விவாதங்கள் குறித்தும், வேலூர் உதவி இயக்குநர், கௌரவ விரிவுரையாளர் திரு.எம்.பொன்னுராங்கம் அவர்கள் மனித மேம்பாட்டின் பிரச்சனைகள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்தும், காட்டாங்கொளத்தூர் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் திருமதி.ஜி.உமா அவர்கள் பாலின சமத்துவமின்மையும், பாகுபாடும் மற்றும் பாலின திட்டமிடலும், மதிப்பீடும் குறித்தும் விளக்கி கூறினார்கள்.

இப்பயிற்சி காலை 9.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை நடைபெற்றது. பயிற்சியின் முடிவில் மாவட்ட திட்ட அலுவலர் திரு.மு.அனந்தகுமார் அவர்கள் நன்றி கூறினார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்